பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 06 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தரப்பிரதேச மாநிலத்தில் இன்றும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

2. குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

3. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் தொலைதொடர்புத் துறையில் ஆயிரத்து 162 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஈரான் நாட்டின் யுரேனியம் செறிவூட்டும் திறன் இன்னும் முழுமையாக அழிக்கப்படவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகமையின் தலைமை இயக்குநர் திரு. **Rafael Grossi** தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியாவின் **Chakraborty Ankolika** காலிறுதிக்கு முந்தயை சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<>>>>**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தரப்பிரதேச மாநிலத்தில் இன்றும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

அம்மாநிலத்தில் உள்ள பரேலியில், இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் 11வது பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கும் குடியரசுத்தலைவர், கோரக்பூர் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவிலும் கலந்துகொள்கிறார்.

நாளை கோரக்பூரில் மஹாயோகி குரு கோரக்நாத் ஆயுஷ் பல்கலைக்கழகம், கலையரங்கம், வகுப்பறைக் கட்டிடங்களை திறந்து வைப்பதுடன் புதிய மகளிர் விடுதி கட்டிடத்திற்கும் குடியரசுத்தலைவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

**<<<<>>>>**

குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ அழைப்பின்பேரில் செல்லும் அவர், நாளை நடைபெறும் குவாட் அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு சுதந்திரமான மற்றும் வெளிப்படையான இந்தோ – பசிபிக் கொள்கை குறித்து விவாதிக்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு நடைபெறும் இந்தக் கூட்டத்தை ஒட்டி நியூயார்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள **'The Human Cost of Terrorism'** என்ற தலைப்பிலான கண்காட்சியையும் திரு. ஜெய்சங்கர் தொடங்கி வைக்க உள்ளார்

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எடுத்துரைக்கும் வகையில் இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<>>>

காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் மண்டல மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா ஹிமாச்சலப்பிரதேசத்தின் தரம்சாலா அருகே உள்ள தபோவனத்தில் இன்று தொடங்கி வைக்கிறார்.

தில்லி, ஹரியானா, ஜம்மு-கஷ்மீர், பஞ்சாப் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்தி, சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்வதுடன் சட்டப்பேரவைகளின் செயல்பாட்டை தற்காலத்திற்கேற்ற வகையில் மேற்கொள்வது குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளது.

டிஜிட்டல் யுகத்தில் நல்லாட்சி என்பதே இந்த மாநாட்டின் மையக் கருத்தாகும்.

<<<>>>

இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

**ALIMCO** நிறுவனத்துடன் இணைந்து இந்த உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக அவர் தமது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு உதவும் வகையில் இவற்றை வழங்கியதற்காக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

பயனாளிகளின் முகத்தில் புன்னகை மற்றும் மகிழ்ச்சியைக் காண்பது உள்ளார்ந்த சமுதாயத்தை உருவாக்குவது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

<<<<>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் தொலைதொடர்புத் துறையில் ஆயிரத்து 162 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தொலைதொடர்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம் உள்நாட்டு உற்பததியை ஊக்குவித்து தொலைதொடர்புத் துறையில் சுயசார்புக்கு வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் வரை 21 நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் 44 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி 2 லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டத்திற்காக 4 ஆயிரத்து 115 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வரை 4 ஆயிரத்து 81 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு 78 ஆயிரத்து 672 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் 26 ஆயிரத்து 351 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் நாட்டின் யுரேனியம் செறிவூட்டும் திறன் இன்னும் முழுமையாக அழிக்கப்படவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகமையின் தலைமை இயக்குநர் திரு. **Rafael Grossi** தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அவர், அமெரிக்கா நடத்திய விமான தாக்குதலில் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் அழிக்கப்பட்டுவிட்டதாக கூறப்படுவதை மறுத்துள்ளார்.

ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே யுரேனியம் செறிவூட்டம் திறனை ஈரான் இன்னமும் பெற்றிருப்பதாவும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் அணுசக்தி கட்டமைப்பை முற்றிலும் அழித்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ள நிலையில், அணுசக்தி முகமை தலைவரின் இந்தக் கருத்து முரண்பாடாக உள்ளது.

<<<>>>

தீவிரவாத கட்டமைப்புகளை குறிவைத்துதான் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

இது தொடர்பாக இந்தோனேஷியாவின் ஜகர்தாவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அந்நாட்டில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தவறான புரிதல் காரணமானவை என்று கூறப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளில் உள்ளதைப் போன்று அல்லாமல் இந்தியாவில் ராணுவப் படைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைமையின் கட்டுப்பாட்டில் செயல்படுவதாகவும், வெளியறவு அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.

<<<>>>

ஜெர்மனியில் நடைபெறும் சர்வதேச டேக்வாண்டோ போட்டிக்கு சேலத்தைச் சேர்ந்த மாணவி அனுசுயா பிரியதர்ஷினி தேர்வாகியுள்ளார்.

தென்னிந்தியாவில் இருந்து முதல் முறையாக பங்கேற்கும் அனுசுயா பிரிதர்ஷினி, இந்தப் போட்டியில் வெற்றி பெற்று இந்தியாவிற்கு பெருமை சேர்ப்பேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**(Voice Byte – Anusuya – 43 Sec)**

<<<>>>

ரயில் பயணத்திற்கான முன்பதிவு பட்டியலை ரயில் புறப்படுவதற்கு 8 மணி நேரம் முன்பாக வெளியிட படிப்படியாக நடவடிக்கை எடுக்குமாறு அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ரயில்வே வாரியத்தை அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் ரயிலுக்கான பயணியர் பட்டியல் முந்தைய தினம் இரவு 9 மணிக்கு இறுதி செய்யப்படும் என்று ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காத்திருப்பு பட்டியலில் உள்ள பயணிகள் மாற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தற்போதுள்ள டிக்கெட் முன்பதிவு அளவை ஐந்து மடங்கு அதிகரிக்கும் வகையில் புதிய பயணச்சீட்டு முன்பதிவு முறை இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒரு நிமிடத்திற்கு ஒன்றரை லட்சம் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்ய முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் ராகிங் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத 89 உயர்கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நான்கு ஐ.ஐ.டி-க்கள், மூன்று ஐ.ஐ.எம்.-கள், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழுவில் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அந்த நோடடீசில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியாவின் **Chakraborty Ankolika** காலிறுதிக்கு முந்தயை சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 4-11, 11-2, 11-6 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் **Fong Tsz Kiu**-ஐ வென்றார்.

<<<<>>>>

உலகக்கோப்பை குத்துச்சண்டைப் போட்டி கஜகஸ்தானின் அஸ்தானாவில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியாவின் சார்பில் ஜாதுமணி சிங், சச்சின், ஹிதேஷ் உள்பட 10 பேர் ஆடவர் பிரிவிலும், மீனாட்சி, அனாமிகா, சாக்ஷி உள்பட 11 பேர் மகளிர் பிரிவிலும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

பர்மிங்ஹாமில் நடைபெற்ற உலக காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான விளையாட்டுப் போட்டிகளின் ஜூடோ பிரிவில் இந்தியாவின் **Lalhumhimi** தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

நார்த்ஹாம்டனில் பிற்பகல் மணி 3.30க்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<>>>>

பல்கேரியா ஜூனியர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Naishaa Kaur** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி பட்டம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-18, 21-13 என்ற செட் கணக்கில் கனடாவின் **Brian Yang**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தன்வீ ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

**<<<<The End>>>>**